<u>சுருக்கம்</u>

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2008–2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க.புதுப்பட்டி கிராமத்தில் கண்ணூத்து ஓடையின் குறுக்கே ரூ.24.00 இலட்சம் செலவில் மட்டும் தடுப்பணை அமைக்கும் திட்டம் – நிலை நிதிக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ப்பி1) துறை

அரசாணை (நிலை) எண்.137 நாள் 21.5.2008

வைகாசி 8, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க:-

1. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண்.OT4/AE4/Part II/2008-09/2007, நாள் 11.1.2008

2. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண். எப்2/பகுதி II திட்டங்கள் 2008–2009, நாள் 21.4.2008

-----

<u>ஆணை</u>:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க.புதுப்பட்டி கிராமத்தில் கண்ணூத்து ஓடையின் குறுக்கே ரூ. 24.00 இலட்சம் செலவில் மட்டும் தடுப்பணை கட்டும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்கண்ட திட்டம் குறித்து நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அனுப்பியுள்ள விளக்கக்குறிப்பில் கண்ணூத்து ஓடை, கம்பம் பாதுகாக்கப்பட்ட வன பகுதியிலிருந்து உற்பத்தியாகி வைகை ஆற்றின் உபநதியான சுருளியாற்றில் விழுகிறது என்றும், கம்பம் புதுப்பட்டி கிராம விவசாயிகளின் கோரிக்கையின் அடிப்படையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இத்திட்ட தலம் அதி நுகர்வு ஒன்றியமான கம்பம் வட்டாரத்தில் கண்ணூத்து ஓடையின் குறுக்கே அமைந்துள்ளது என்றும் இத்தடுப்பணையின் நீளம் மற்றும் உயரம் முறையே 17 மீட்டர் மற்றும் 3 மீட்டர் ஆகும் என்றும், இத்தடுப்பணையின் கொள்ளளவு 0.15 மில்லியன் கன அடி ஆகும் என்றும் ஆண்டிற்கு 3.5 முறை தண்ணீர் நிரம்பும் எனவும் இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம்

இதன் பாசன பரப்பில் உள்ள 15 கிணறுகள் மூலமாக 37.77 ஏக்கர் தென்னந்தோப்புகள் மற்றும் புதியதாக 7.59 ஏக்கர் நன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் எனத் தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கு பயன் செலவு விகிதம் 5.72:1 ஆகும் என்றும், இத்திட்டத்தினை செயல்படுத்த நிலம் கையப்படுத்த தேவையில்லை எனவும் இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர், தேனி ந.க.எண்.9952/ஜி2/நாள் 19.9.2000–ன்படி ஒத்திசைவு அளித்துள்ளார் எனவும், இத்திட்டத்தின் மதிப்பு 2008–2009 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.24.00 இலட்சங்கள் ஆகும் எனவும் நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 28.00 இலட்சத்தில் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க.புதுப்பட்டி கிராமத்தில் கண்ணூத்து ஓடையின் குறுக்கே திட்ட மதிப்பீட்டின் படி ரூ. 24.00 இலட்சம் (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) செலவில் தடுப்பணை கட்டும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக, சில்லறை செலவினங்கள் சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள், மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 2.5% மேல் மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

> "4702 – 00 சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு–101. மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA சிறு பாசன சிறப்புத் திட்டம் –16 பெரும் பணிகள் " (கு.தொ.கு. 4702–00–101–JA -1607)".

5. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 26461/பொ.ப.II/2008 நாள் 8.5.2008ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை 2.
தலைமைப் பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை– 5
மாவட்ட கருவூல அலுவலர், தேனி
மாநில கணக்காயர், சென்னை.18
<u>நகல்</u>
நிதி (பொ.ப. II /வ.செ.II) துறை, சென்னை.9
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை 9 (5 நகல்கள்)
இ.கோ /உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்